★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: புரட்டாசி 13உ வெள்ளி (28—9—56) ★ ★ வெளியூர்: புரட்டாசி 14உ சனி (29—9—56) [இதழ் 94

பணமல்ல குறிக்கோள் - சேவை

பட்டதாரி இளைஞர் மேற்கொண்ட இலட்சியம்

சாங்லி, செப். 27—

கர்னாடக பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானம் படித்து பி.எஸ்.சி. பட்டம் பெற்ற இரகுநாத் எஸ்வந்த் படீல் என்பவர், ஒரு கிராமத் தலைவன் பதவியை ஏற்றுக்கொண்டு, 'மாதம் ரூ. 7 சம்பளம் கொடுத்தால் போதும்,' என்று கூறியுள்ளார்.

தற்போது அவர் இலட்சுமேசுவர் என்னும் இடத்திற்கு ஐந்து மைல் தூரத்தில் உள்ள ஷிகோ என்னும் கிராமத்தில் வசிக்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

தூத்துக்குடி நிலைமை: F. I. R. தாக்கல்

வாரண்டுகள் பிறப்பிக்கப்பட்டன

பெருமாள்—சந்தியாகு போலீசில் சரண்புகுந்தனர்

ராமநாதன் — செல்லத்துரை தூத்துக்குடியில் கைது

தோழர் கே. வி. கே. சாமி படுகொலை செய்யப்பட்டதை யொட்டி போலீஸ் அதிகாரிகள் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கும் தீவிர முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

சாமியுடனிருந்த தோழர் நடராசன் தெரிவித்துள்ள விவரப்படி கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் போலீசார் தேடிக்கொண்டிருந்த ஆறு பேர்களில் இருவரான எஸ். பெருமாள், தூத்துக்குடி முனிசிபல் லாரி டிரைவர் சந்தியாகு என்பவர்கள் நேற்று அம்பாசமுத்திரம் மாஜிஸ்திரேட்முன் சரண் அடைந்துள்ளனர்.

மற்றும், இராமநாதன், செல்லத்துரை ஆகிய இருவரையும் நேற்று தூத்துக்குடியிலேயே போலீசார் கைது செய்து சிறைக் காவலில் வைத்துள்ளனர்.

தோழர் நடராசன் தெரிவித்தத்தகவலின்படி போலீசார், தங்கப்பழம், சு.பெருமாள், சந்தியாகு, பொன்னுச்சாமி, செகந்நாதன், ஆத்தி, பெருமாள் ஆகிய ஏழு பேர்மீது F. I. R. பதிவு செய்து இவர்களைக் கைது செய்ய வாரண்டு பெற்றிருப்பதாகவும் தெரிகிறது.

மற்றவர்கள் இன்னும் தலைமறைவாக இருப்பதாகவும், அவர்களைக் கண்டுபிடிக்கப் போலீசார் தீவிர முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிகிறது.

மேலும் விவரங்களை அறியவும், தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடவும் சென்னையிலிருந்து பிரத்தியேகத் துப்பறியும் போலீஸ் நிபுணர்கள் தூத்துக்குடிக்கு வந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

இவ்வழக்கு சென்னையில், பிரத்தியேக நீதிமன்றம் ஒன்றில் விசாரிக்கப்படலாம் என்றும் பொதுமக்களால் பேசிக் கொள்ளப்படுகிறது

பெருமாள் என்பவர் அண்மையில் நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் கே. வி. கே. சாமியுடன் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்.

தூத்துக்குடித் தோழர்கள் அண்ணாவின் வருகையை எதிர்நோக்கியிருக்கின்றனர். யாவரும் அமைதியாகவேயிருந்து வருகின்றனர். 30-ந்தேதி அனுதாபக் கூட்டத்திற்கு எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன.

இவ்விரங்களை தூத்துக்குடி நகர தி. மு. கழகச் செயலாளர் ஜோசப் டிரங்போன் மூலம் அறிவித்தார்.

வடக்கு எல்லை மீட்புக் கிளர்ச்சி

ஐந்தாம் நாளன்றும் 62 பேர் கைது

சென்னை, செப். 28—

வடக்கு எல்லை மீட்புக்காகத் தமிழரசுக் கழகத்தவர் நடத்தும் மறியல் கிளர்ச்சி இன்றும் ஐந்தாம் நாளாக நடைபெற்றிருக்கிறது; இன்று மொத்தம் 62 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இன்று காலை 9 மணி அளவில் கிளர்ச்சி துவங்கிற்று.

தோழர்கள் திருத்தணி என். ஏ. ரஷீத், அத்திமாஞ்சேரி பி. முத்துவேல், இராமகிருஷ்ணபேட்டை வீராண்மைக் கழகத் துணைத் தலைவர் கோபாலகிருஷ்ணன், சென்னை மீர்சாகிப்பேட்டை டி. ஏ. துரை ஆகியோரின் தலைமையில் நான்கு பிரிவாகத் தொண்டர்கள் மறியலில் ஈடுபட்டனர்.

அவர்கள் அனைவரையும் போலீசார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

கிளர்ச்சி அமைதியாகவே நடைபெற்றிருக்கிறது.

★

நாளை!

நாளை (29-ந் தேதி) கவிஞர் கா. மு. ஷெரீப் 'செங்கோல்' நிர்வாகி வி. கணபதி, எஸ். சிவஞானம் (முருகன்), பூங்கா நகர் தங்கவேல் ஆகியோரும், மற்றும் பலரும் மறியலில் ஈடுபடுவர் என்று தமிழரசுக் கழக அலுவலகத்திலிருந்து தகவல் தரப்பட்டிருக்கிறது.

ராணிகஞ்சில் துப்பாக்கிப் பிரயோகம்

இரண்டு தொழிலாளர்கள் மரணம்; 9 பேருக்குக் காயம்

பர்துவான், செப். 27—

ராணிகஞ்ச் நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. சில தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லுகையில் மறியல் செய்தவர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். உடனே போலீஸ் தலையிட்டது; ஆத்திரமடைந்த 3,000 தொழிலாளர்கள் வில், அம்புகளுடன் போலீசாரைத் தாக்கினராம.

நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம். அதனால் இரண்டு தொழிலாளர்கள் இறந்தனர் என்றும், ஒன்பது பேருக்குக் காயமேற்பட்டது என்றும் தெரியவருகிறது.

சுரங்கத்தில் வெள்ளம்

40 தொழிலாளர்கள் மாண்டனர்

கல்கத்தா, செப். 27—

அதிகப்படியான மழை பெய்தமையால், அசன்சாலிலிருந்து 4 மைல் தூரத்திலுள்ள நிலக்கரிச் சுரங்கத்தின் மேல் தளம் இடிந்து வெள்ளம் உள்ளே புகுந்தமையால், சுரங்கத்தில் வேலை செய்துகொண்டிருந்த 60 தொழிலாளர்களில் 40 பேர் இறந்துவிட்டனர் என்று தெரியவருகிறது.

பள்ளி ஆசிரியர் படுந்துயரம்

சட்டசபை முன் 1,500 பேர் ஆர்ப்பாட்டம்

பாட்னா, செப். 27—

தங்களுடைய ஆறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை கல்வி அமைச்சருக்கும், கல்வி அதிகாரிகளுக்கும் கொடுத்து, சுமார் 1,500 ஆரம்ப ஆசிரியர்கள் பீகார் மாநிலத்தின் சட்டசபைமுன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அவர்களின் ஊதியத்தை உயர்த்தி வாழ்க்கைத் தரத்தைச் சீர்செய்ய வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையின் அடிப்படையாகும்

ஆட்சியின் அவலட்சணம்!

மதுரை, செப். 26—

மதுரை நியாயவிலைக் கடைகளில் கடந்த 20-ந்தேதி முதல் பச்சரிசி கையிருப்பு இல்லை என்று தெரிவித்துவிட்டனராம்.

இதனால் நூற்றுக்கணக்கான மக்கள் ஏமாற்றத்தோடு வீடு திரும்பியதாகக் கூறப்படுகிறது.

விசைத்தறிக்கு எதிர்ப்பு

சர்வ கட்சிக் கண்டனம்

காஞ்சிபுரம், செப். 27—

சர்வகட்சியின் சார்பில், விசைத்தறியை எதிர்த்து சுமார் 1,000 பேர் ஊர்வலமாகச் சென்றனர்.

'விசைத்தறியை வாபஸ் வாங்கு' 'தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்' என்ற ஒலி முழக்கம் எழுப்பப்பட்டது.

அன்றுமாலை நடைபெற்ற சர்வ கட்சிக் கூட்டத்தில், தோழர்கள் அரங்கண்ணல், பார்த்தசாரதி, சேதுமாதவன், நடராசன் பேசினர்.

சென்னை சிறையில் ம. பொ. சி.

அண்ணா சந்தித்தார்

சென்னை, செப். 28—

24—9—56 முதல் சென்னை சட்டசபையின் முன் நடைபெற்று வரும் வடக்கு எல்லைக் கிளர்ச்சியில் கலந்துகொண்டதற்காகப் போலீசாரால் கைது செய்யப்பட்டு சென்னைச் சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம், வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுத் தலைவர்களான கே. விநாயகம், பொதட்டூர்பேட்டை தியாகராசன், சென்னைத் தமிழரசுக் கழகத் தலைவர் ஜி. உமாபதி ஆகியோரை நேற்று பிற்பகல் 4 மணிக்கு அண்ணா அவர்கள், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களுடன் சென்னை சிறைச்சாலைக்குச் சென்று சந்தித்து உரையாடினர். தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் அவர்களும் உடன் சென்றிருந்தார்.

கிளர்ச்சியில் ஈடுபட்டு சிறைப்பட்டுள்ள மற்றத் தொண்டர்கள் சிறிது தொலைவிலிருந்தனர்; அவர்களுக்கு அண்ணா வணக்கம் கூறினர்.

தமிழர்களிடையே இக்கிளர்ச்சி தக்கதோர் எழுச்சியை ஏற்படுத்தி இருப்பது குறித்து, அண்ணா தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

தூத்துக்குடி சென்று திரும்பியதும், சந்தித்து, கிளர்ச்சி சம்பந்தமாகக் கலந்து பேசுவதாக அண்ணா தெரிவித்தார்.

தோழர்கள் ம. பொ. சி.-யும், விநாயகம், உமாபதி ஆகியோரும் தூத்துக்குடி சம்பவம் குறித்துத் தமது துக்கத்தையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்தனர்.

'அப்பா! நானும் இங்கே இருக்கேன்...!'

ம. பொ. சி.-யின் பெண் குழந்தை கண்ணகி (ஐந்து வயது), ம. பொ. சி.-யைக் காணவந்த காட்சி உருக்க மூட்டுவதாக இருந்தது. மழலை மொழியில் கண்ணகி 'அப்பா! நானும் இங்கேயே இருக்கேன்....' என்று கூற, ம.பொ.சி. தழதழத்தக் குரலில், 'வீட்டுக்குப் போம்மா....' என்று கூறினர்.

"சேர்ந்தாற்போல் இரண்டு நாட்கள்கூட என்னை விட்டுப் பிரிந்திருக்கச் சம்மதிக்காது, குழந்தை" என்று ம. பொ. சி. சொன்னபோது அங்கிருந்த அனைவருமே உருகினர்.

அனேகமாக, சிறையில் உள்ளவர்கள் மீது வழக்கு எதும் தொடரப்படமாட்டாது என்றும், சட்டசபைக் கூட்டம் முடிந்ததும், அனைவரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் நம்பப்படுகிறது.

சட்டசபை நடைபெறும் நாட்கள் முழுவதும், இக்கிளர்ச்சி நடைபெறத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

சட்டசபை, சனிக்கிழமையோடு (நாளையதினம்) முடியும் என்றும், அனேகமாக அன்று அல்லது திங்கட்கிழமை, அனைவரும் விடுதலை செய்யப்படலாம் என்றும் தெரிகிறது.

★

டி. கே. சண்முகம்

அண்ணா ம. பொ. சி.-யுடன் உரையாடிக்கொண்டிருந்த நேரத்தில், தோழர் டி. கே. சண்முகம், எஸ். டி. சுந்தரம், கவிஞர் கா. மு. ஷெரீப் ஆகியோருடன், ம. பொ. சி.-யைக் காணவந்திருந்தார். மற்றும், தமிழரசுக் கழகத் தோழர்கள் சிலரும் வந்திருந்தனர். அனைவரிடமும் ம.பொ.சி. ஆர்வத்துடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

பரிகாரம் தேடிவிட்டார் மத்திய அமைச்சர்!

எர்ணாகுளம், செப். 26—

திரு - கொச்சியின் மக்கள் தொகைப் பிரச்சினைக்கு மத்திய தற்காப்பு அமைச்சர் கட்ஜு ஒரு பரிகாரம் தேடியுள்ளார்!

'திரு-கொச்சியிலிருந்து 50,000 பேர் மத்திய பாரதத்திற்குக் குடியேற வேண்டும்; வாருங்கள்' என்று அழைப்பு விடுத்திருக்கிறார் அந்த அமைச்சர்!

4 ஆண்டுகளிலேயே 5 ஆண்டு உற்பத்தியாம்

வெளிநாடுகளிடம் ரூ.40 இலட்சம் இயந்திரங்களுக்கு 'ஆர்டர்'

பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலைக்கு மேலும் சில இயந்திரங்களைத் தருவித்து 5-ஆண்டு உற்பத்தித் திட்டத்தை 4 ஆண்டுகளிலேயே நிறைவேற்றுவதற்காக வெளிநாடுகளிலுள்ள 8 கம்பெனிகளிடம் மொத்தம் ரூ. 40 இலட்சம் மதிப்புக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளதாம்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 28-9-'56 வெள்ளி

சேர்வராயன் பாக்சைட்!

சேலத்து கனிச் செல்வமான இரும்பு, தோண்டி எடுத்துத் தொழில்படுத்துவார் இல்லாது, மக்களுக்குப் பயனளிக்காது, மண்ணுக்கடியிலேயே, உலகம் தோன்றிய நாள்தொட்டு வீணே பதுங்கிக் கிடக்கிறது. 'தொழில்களுக்கெல்லாம் அடிப்படைத் தொழிலாக விளங்கும் உருக்குத் தொழிற்சாலை ஒன்றைத் துவக்கி, ஒளிந்து கிடக்கும் அக்கருப்புத் தங்கத்தை மக்களுக்குப் பயன்படும் பண்டங்களாக மாற்றி அமைக்க முன்வரக் கூடாதா இக்காங்கிரஸ் ஆட்சியாளர்?' எனக் கேட்டால், 'அவ்வாறு கேட்கப்படுவது கூடாது; அது குறுகிய வட்டாரப்பற்று; விரிந்த தேசீயப் பண்புக்கு மாறுபட்டது- இந்திய ஒற்றுமைக்கு உலை வைக்கக் கூடியது' எனக் கோபித்துக்கூறி, கோரிக்கை எழுவதையேதடுக்கக் காங்கிரஸ் எத்தர்கள் முயலுகின்றனர்.

மேலும் சில திறமையான காங்கிரஸ் எத்தர்கள், 'நிலக்கரி இல்லையே, போதிய மின்சாரத்திற்கு வசதி இல்லையே, எவ்வாறு உருக்குத் தொழிற்சாலையைச் சேலத்தில் துவங்குவது?' எனக் கனிமொழி கூறி, கோரினவர்கள், 'இரும்பைக்காட்டிய இறைவன் அதைத் தொழில்படுத்தத் தேவைப்படும் நிலக்கரியைப் படைத்திருக்கக் கூடாதா?' எனச் சலித்துக் கொள்ளும்படிச் செய்துவிடுகின்றனர்.

திறமையிலும் திறமை மிகுதியும் உடைய காங்கிரஸ் எத்தர்கள், 'இந்தியத் துணைக்கண்டத்தின் ஒரு பகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொழிலால் மற்றப் பகுதிகளும் பலன் பெறுவது நிச்சயம்; எனவே, அந்தப் பகுதியில் தொழில் இருக்கிறதே—மற்றொரு பகுதியில் தொழில் இல்லையே எனக் குரலெழுப்புவது கூடாது—அது பொருளற்றது' எனப் போதித்து, தென்னாட்டின் தொழிலற்றுக் கிடக்கும் விதவைக் கோலத்தைப் பொன்னுடை போர்த்தி ஏமாற்றும் பணியினைப் புரிந்து வருகின்றனர்.

இங்கு ஆட்சியில் கொலுவீற்றிருக்கும் காங்கிரஸ் ஏமாளிகளோ, ஏதோ பதவி கிடைத்ததே பெரும் பேறு, அதனைக் காப்பாற்றிக்கொண்டு காலந் தள்ளுவதே கட்டை கடைத்தேறும் ஏற்பாடு என, நிலைமை உணர்ந்து இல்லாமை ஒழிய வகை கோருவோரை, கோமாளித்தனமாகக் கேலி பேசி, தங்கள் ஏமாளித்தனத்தையும், 'மக்கள் நல்வாழ்வு பெறுவதில் தங்களுக்குள்ள அலட்சியத்தையும் சிலாசாசனமாக்கிக் கொள்ளுகின்றனர்.

சேலத்தின் இரும்புக் கனையோ சிந்துவாரற்றும், எடுத்துப் பார்ப்பாரற்றும் இருக்கும் நிலையில், நமக்கு மேலும் ஆசையைத் தூண்டும் வகையில் அதே சேலத்தில் சேர்வராயன் மலைப் பகுதியில் பதுங்கிக்கிடக்கும் பாக்சைட் என்ற தாதுப் பொருள், இந்தியாவின் மற்றப் பகுதிகளில் கிடைக்கப்பெறும் பாக்சைட்டைவிட மிக மிகச் சிறந்தது என்ற இனிக்கும் செய்தி தரப்படுகிறது.

மற்றப் பகுதிகளில் கிடைக்கப்பெறும் பாக்சைட்டைவிட நமது தாயகத்தில் இருக்கும் பாக்சைட் மிக உயர்ந்தது என்ற இனிக்கும் செய்தியை நாம் கேள்வியுறும்பொழுது, நமது இருதயம் நம்மையும் அறியாமலே பூரிக்கிறது. அப்பெருமையை எண்ணி எண்ணி நமது அகமும் முகமும் ஒருங்கே மலர்கிறது. ஆம். அதே நேரத்தில் நமக்குப் பெருமூச்சும் வருகிறது; விழிகளிலே நீர் கொப்பளிக்கிறது.

இயற்கை தந்த வளங்கள் ஒன்றுக்குப் பலவாக நம்மிடம் இருந்தும், அவ்வளங்களை நாம் பெற்று இருக்கின்றோம் என்பதை உணர்ந்தும், அதைப் பயன்படுத்த பலநூறு முறை கற்றிருந்தும், அவைகளைச் செயலாற்றக்கூடிய அதிகாரம் இல்லாத காரணத்தால், பாலைவனத்தில் வாழும் மக்கள்போல் பஞ்சத்தின் கொடுமைக்கும், பட்டினியின் தாக்குதலுக்கும் பலியாகி நாயினும் கேடாய் உயிருடன் இருந்துவருகின்றோமே என்ற எண்ணம் மீண்டும் நமது உள்ளத்தில் மோதுகின்ற பொழுது, பாக்சைட் பற்றி நமது செவிகளில் நுழைந்த தித்திக்கும் சேதிக்கு, நாம் என் நமது செவிகளை ஆளாக்கினோம் என்று நம்மை நாமே கடிந்து கேட்டுக் கொள்ள வேண்டியவர்களாகின்றோம். அங்நிலையில்தான், நமது நெஞ்சங்களில் குமுறலும், விழிகளில் வெந்நீர் முத்துத் துளிகளும் இடம்பெறுகின்றன.

கட்டுண்டு கிடக்கும் சிங்கமாக்கப்பட்டுக் கிடக்கிறது தாயகம். அதன் காலடியில் வளமான இறைச்சி கிடந்தாலும், அதனைச் சிங்கம் உண்பதெங்கே?

அரசியல் முடமாக நமது தாயகம் இருக்கும்வரையில், சேர்வராயன் பாக்சைட்டின் சிறப்பைக் கேட்டு, முதற்கண் மகிழ்ந்து அடுத்த வினாடி அதனைப் பயன்படுத்திக்கொள்ள இயலாத செந்தேள் கொட்டிய கொடுமைக்கு ஆளாகிக் கிடக்கத்தான் வேண்டும். என்றாலும், தாயகத்தை விடுவிக்கும் பணியிலிருந்து நாம் விலகிவிடப் போவது கிடையாது. ஊத முடிகின்ற வரையில் ஊதுவோம்; பொழுது விடிகிறபோது விடியட்டும்.

வாழ்த்தும் 'வசவு'ம்

சத்தியாக்கிரகத்துக்கு நிதி அமைச்சர் சுப்பிரமணியம் புதிய வியாக்கியானம் தருகிறார்! திரும்பிப் பார்க்கும் போது திருச்சபையிலே எங்கும் கைதூக்கும் கனவான்கள் நிரம்பியிருக்கும்போது, ஏன் வியாக்கியானம் செய்ய முடியாது? தாராளமாகத் துணிவு வரும். அந்தத் துணிவுடன் பேசுகிறார் நிதி அமைச்சர்.

வடக்கெல்லைப் பிரச்சினை குறித்து வழியும் வகையும் அறியாமல், மெல்லவும் விழுங்கவும் முடியாமல் சென்னை சர்க்கார், டில்லி சர்க்காரின் மந்தப் போக்குக்கு ஒத்து ஊதிக்கொண்டிருக்கிறது. தமிழர் இது குறித்துத் தம் மனக் கொதிப்பைப் பன்முறை எடுத்துக்காட்டினர்.

சர்வகட்சிக் கூட்டணியின் சார்பில் நடைபெற்றப் பொது வேலைநிறுத்தம் ஒன்று போதும்—பொறுப்பை உணர்ந்து பணியாற்றும் பண்பு கொண்டதாக இந்த அமைச்சர் அவை இருக்குமானால் சூடு சொரணை பிறந்திருக்கும். ஆனால், பெருமலையிலும் 'கெம்பீர' நடை போடும் எருமையைப் பார்க்கிறோமல்லவா! அரசியலிலும் இதைக் காண்கிறோம்.

இந்தப் போக்கை மாற்ற வடக்கெல்லைக் கமிட்டி முனைந்தது. சென்னை சட்டசபைமுன் எல்லைப் பிரச்சினை சம்பந்தமாகத் தமிழரின் உரிமை பற்றி முழக்கமெழுப்பி, அமைச்சர் அவைக்குச் சூடு பிடிக்கவும், சுறுசுறுப்பு ஏற்படவும் 'சத்தியாக்கிரகம்' செய்ய முற்பட்டது.

தமிழ்ப் பெருமக்களின் பேராதரவு இந்த உரிமைக் கிளர்ச்சிக்கு இருக்கிறது.

தமிழரசுக் கழகம் இக்கிளர்ச்சிக்குத் துணை நிற்கிறது.

ம. பொ. சி., விநாயகம்— போன்றத் தலைவர்கள், இந்தப் பிரச்சினையில் காட்டிவரும் அக்கரை நாடறிந்தது.

அவர்களும், உடன்சென்ற 400 தோழர்களும், சென்னைச் சிறையில் வைத்துப் பூட்டப்பட்டுள்ளனர்.

அவர்களைச் சிறையிலே பூட்டிவிட்டு, நிதி அமைச்சர் வியாக்கியானம் பேசுகிறார் — சட்டசபையில்!

“சத்தியாக்கிரகம் என்பது, தமது கொள்கைக்கு ஆதரவு அளிக்கத்தக்க மனமாறுதலை மாற்றார் மனதிலே ஏற்படுத்த வகுக்கப்பட்டது; ம. பொ. சி., இதைத் தவறான காரணத்துக்கு அர்த்தமற்ற முறையில் பயன்படுத்துகிறார்; ஏனெனில், என் மனதையோ, அமைச்சர் அவையின் மனதையோ இவர் மாற்றத் தேவையில்லை; எங்களுக்கும் எல்லைப் பிரச்சினையில் நிரம்ப அக்கரை உண்டு; நாங்களும் அதற்கான வழிவகை காண முயன்று வருகிறோம்; டில்லியிடம் எடுத்துக் கூறி இருக்கிறோம்; இந்நிலையில் சத்தியாக்கிரகம் ஏன்?” என்று கேட்கிறார்.

எல்லைக் கிளர்ச்சியால் சிறையில் தலைவர்களும் தொண்டர்களும் அடைபட்டுக் கிடக்கும் போது, 'வெல்வட்டு' மெத்தையில் வீற்றுக்கொண்டு வியாக்கியானம் பேசும் விசித்திரப் போக்கு கொண்டுள்ளார் நிதி அமைச்சர்.

தமிழர்கள், 'இப்படிப்பட்டவரை அமைச்சராகப் பெற்றோமே!' என்று வெட்கித் தலைகுனியாமலிருக்க இயலுமா?

'பொருளற்றது, இந்த முயற்சி' என்று கூறும் அமைச்சர், ஒரு சொல் என் உரிமையுடன் டில்லியை நோக்கிக் கேட்கக்கூடாது? தமிழரின் உரிமை முழக்கத்தின் பொருளை, ஏன் எடுத்துக் காட்டக் கூடாது? தமிழர் இந்தப் பிரச்சினைக்காகப் பல்லாயிரவர் எத்தகையக் கஷ்டநஷ்டம் ஏற்கவும் துணிந்து நிற்கின்றனர்—அந்த நிலைமையின் ஓர் முன்னறிவிப்பே வடக்கெல்லைக் குழுவின் கிளர்ச்சி என்பதை ஏன் எடுத்துக்காட்டி, வாதாட—போராட முனையக்கூடாது?

இதைச் செய்தால், பதவியா பறி போய்விடும்? இந்த அற்பப் பதவியைக் காப்பாற்றிக்கொள்ளவா, தமிழர்களை நாள்தோறும் நூற்றுக்கணக்கிலே சிறையில் தள்ளுவது? இவர் இங்கே பதவியைச் சுவைப்பாராம்—அங்கு அவர்கள் சிறைச்சோறு தின்னவேண்டுமாம்! இந்த இலட்சணத்தில் வியாக்கியானம் வேறு பேசுகிறார், சட்டாம்பிள்ளை!

தமிழர், தமக்காக—தமது உரிமைக்காகக் கிளர்ச்சி நடத்திச் சிறை சென்ற செம்மல்களை வாழ்த்துகின்றனர்! பேராதரவு தரப் பெருமிதத்துடன் முன் வந்துள்ளனர்.

சர்வகட்சிக் கூட்டணியும், தமிழர் உரிமையை மீட்பதற்கான முயற்சிக்கு ஆதரவு தர நாட்டு மக்களை நாடும் கட்டமும் விரைவில் ஏற்படக்கூடும்.

வியாக்கியானம் பேசி விசித்திரப் போக்கு கொள்ளும் வீண் வேலையை விட்டொழித்து, சிறிதளவு வீரம் காட்டித் தமிழரின் மானத்தைக் காப்பாற்றும் பணியில் அமைச்சர் ஈடுபட வேண்டுகிறோம். முயற்சியாவது எடுக்கலாமே!

தமிழர், தமக்காகப் போரிட முன்வந்துள்ளோரை வாழ்த்துகின்றனர்; அமைச்சரிடமிருந்தோ 'வசவு' கிடைக்கிறது. தமிழர், இந்த அமைச்சர் அவைபற்றி என்ன எண்ண முடியும்? வெட்கம் வேலாகக் குத்துகிறது, இப்படி ஒரு அமைச்சர் அவையின் ஆட்சியிலே இருக்கிறோமே என்று எண்ண எண்ண!

மதுரையில் தண்ணீர்ப் பஞ்சம் தீர்ந்துவிடும்

சென்னை, செப். 25—

வைகை நீர்த் தேக்கத்திலிருந்து 40 மைல் நீளத்திற்குக் குழாய்கள் அமைத்துத் தண்ணீரைக் கொண்டு வந்து மதுரை நகர மக்களுக்கு வழங்க நகர சபை முடிவு செய்துள்ளது.

இந்தத் திட்டம் வெற்றிகரமாக உருவானால் கோடை காலத்தில் மதுரையில் ஏற்படும் தண்ணீர்ப் பஞ்சம் தீர்ந்துவிடுமென்று கூறப்படுகிறது.

செயற்கைச் சினை முறை நிலையங்கள்

சென்னை, செப். 26—

வேலூர், திருநெல்வேலி, விருதுநகர் ஆகிய மூன்று இடங்களிலும் செயற்கைச் சினை முறை நிலையங்கள் நிறுவப்படும்.

அகில இந்திய கேந்திர கிராமத் திட்டத்தின்படி இந்த நிலையங்கள் நிறுவப்படுகின்றனவாம்.

தவறான மருத்துவம்!

புதுடில்லி, செப் 22—

“இந்தியாவில் குழந்தைகளை, பெரியவர்களைப்போல் கருதி மருத்துவம் செய்வது தவறாகும்! குழந்தைகளின் அவயவங்களின் தன்மை முதியோர்களின் தன்மைக்கு மாறானது,” என்று, சோவியத் நிபுணரும், வைத்திய பேராசிரியருமான சுரீன் தெரிவித்துள்ளார்.

தெரிந்து கொள்ளுங்கள்

ஆதாரக் கல்வியைப் பிரதான அம்சமாகக் கொண்ட ஆரம்பக் கல்வியின் பரவலுக்காக இரண்டாவது திட்டத்தில் மொத்தம் ரூ. 89 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

1955-56-ம் ஆண்டில், இந்தியாவிலிருந்து மொத்தம் சுமார் ரூ 12,92,00,000 பெறுமானமுள்ள 30,862 டன் முந்திரிப் பருப்பு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

'காலம்' மாறிவிட்டதை உணராதவர்கள்!

ஹெண்டர்சன், செப். 24—

இங்குள்ள பள்ளிக்கூடம் ஒன்றில் நீக்ரோ மாணவர்கள் தங்கள் குழந்தைகளுடன் படித்து வருவதை எதிர்த்து சுமார் 400 வெள்ளையர் குழந்தைகளின் பெற்றோர் அக்குழந்தைகளைப் பள்ளியிலிருந்து வெளியேற்றி அழைத்துச் சென்றிருக்கின்றனர். பள்ளியில் வெளியேறிச் சென்ற 400 குழந்தைகள் போக, அங்கு மேலும் 400 குழந்தைகள் மட்டுமே இருந்தனராம்.

பள்ளியைச் சுற்றி நின்றுகொண்டிருந்த குழந்தைகளின் பெற்றோர்களான வெள்ளையர் கூட்டத்தில் ஒருவர், நீக்ரோ மாணவர்கள் தங்கள் தங்கள் பள்ளிகளுக்குத் திரும்பிப் போகும் வரையில் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பப்போவதில்லை என்று கூச்சலிட்டாராம்!

ஆனால், பள்ளிக்கூட அதிகாரி அப்பள்ளிக்கூடம் திறந்தே இருக்கும் என்று அறிவித்திருக்கிறாராம்.

அப்பள்ளியில் மொத்தமாக ஐந்தே நீக்ரோ மாணவர்கள்தான் கல்வி கற்று வருகின்றனராம்.

அக். 7-ந்தேதி முதல் நடெங்கும் வேலை நிறுத்தம்?

பாதுகாப்பு ஊழியர்கள் நிலை

புதுடில்லி, செப். 26—

பாதுகாப்பு நிலையங்களிலிருந்து இந்திய அரசாங்கம் 6,000 பேர்களை ஆட்குறைப்பு செய்வதை எதிர்த்து, நாடெங்கும் வேலை நிறுத்தம் மேற்கொள்ள அகில இந்திய பாதுகாப்பு ஊழியர் நிர்வாகக்குழு முடிவு செய்திருக்கிறது.

ஆட்குறைப்பு செய்யப்படுவதற்கு முன்னரே மாற்றுவேலை தரப்படும் என்று ஒப்பந்தம் ஏதும் ஏற்படாவிட்டால், அக். 7-ந்தேதி முதல் நாட்டிலுள்ள எல்லாப் பாதுகாப்பு ஊழியர்களும் சட்டத்திற்கு உட்பட்டு வேலைநிறுத்தம் செய்வராம்.

9-கோடி பவுன் செலவில் எண்ணெய்க் குழாய்!

பாரீஸ், செப். 24—

பாரசீக வளைகுடாவிலிருந்து துருக்கி வழியாக மத்தியதரைக் கடலுக்கு எண்ணெய்க் குழாய் போடுவதற்கான ஒரு திட்டத்தை பிரெஞ்சு அரசாங்கம் அங்கீகரித்துள்ளது.

இந்தத் திட்டத்திற்கு 9 கோடி பவுன் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

சூயஸ் வழியாக எண்ணெய்க் கப்பல்கள் ஐரோப்பாவுக்குள் வர முடியாமல் போய்விட்டால் இந்தப் புதிய ஏற்பாடு அப்போது நலன் தருவதாக அமையுமாம்.

அகிம்சை பேசியவர்களின் அவலட்சணம்!

புதுடில்லி, செப். 24—

1951—52ல் இந்தியாவிலிருந்து ரூ. 64,20,124 மதிப்புள்ள ஆட்டுத் தோல், மாட்டுத் தோல் ஏற்றுமதி செய்யப்பட்டதாம்; அது, 1953—54ல் ரூ. 80,29,087 ஆக உயர்ந்துவிட்டதாம். இவ்வாண்டு ஜூன் முடிவுக்குள் 66 இலட்சமாக உயர்ந்திருக்கிறதாம்.

இதிலிருந்து இந்தியாவில் 'வதை' அதிகரித்து வருவதைக் கண்டித்து 83 இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உணவு மந்திரிக்கு எடுத்துக் காட்டியுள்ளனர் என்று தெரிகிறது.

புதிய சட்டம் இயற்ற முதலிடம் தரப்படும்?

புதுடில்லி, செப். 25—

மிக அவசரமாக நிறைவேற்ற வேண்டியிருப்பதால் மாநிலங்களின் கருத்தையறியாமலே இந்திய அரசாங்கம், பத்திரிகைகள் வகுப்பு வெறியைத் தூண்டாமல் தடுப்பதற்கான சட்டமொன்றுக்கு அடுத்து கூடும் பாராளுமன்றத்தில் முதலிடம் தருமெனத் தெரிகிறது.

மறைந்த மாவீரன் கே. வி. கே. சாமிக்கு தோழர்களின் இறுதி மரியாதை

நாடெங்கிலுமுள்ள நமது கழகத் தோழர்களும் அனுதாபிகளும் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து நிறைவேற்றிய தீர்மானங்கள் முதலியன இங்கு சுருக்கித்தரப் பட்டுள்ளன :—

சென்னை

8-வது வட்டம்

23—9—56-ல் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் இரண்டு நிமிட நேரம் மௌனமாக இருந்து அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

11-வது வட்டம்

22—9—56 மாலை 7 மணிக்கு; சாலை விநாயகர் கோயில் தெருவில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. இரண்டு நிமிட நேரம் மௌனமாக இருந்து அனுதாபம் காட்டப்பட்டது.

16-வது வட்டம்

21—9—56 காலை 11 மணிக்கு, கொடி மரத்தில் பறந்துகொண்டிருந்த கழகக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டது இரவு 7 மணிக்கு கழகப் பணிமனையில் நடைபெற்றக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

37-வது வட்டம்

23—9—56 காலை 9 மணிக்கு நடைபெற இருந்த திராவிட நாடு விடுதலை நாள் விழாக் கூட்டம் அனுதாபக் கூட்டமாக மாற்றப் பட்டு, தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். தோழர்கள் அனைவரும் கருப்புச் சின்னங்கள் அணிந்திருந்தனர். கழகக் கொடி தாழப் பறக்கவிடப்பட்டது.

புதுப்பேட்டை :

25—9—56 இரவு 8 மணிக்கு, அண்ணா படிப்பகத்தில் நடைபெற்ற திராவிட நாடு பிரிவினை நாள் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருவல்லிக்கேணி

கே. எஸ். பாண்டியன் படிப்பகச் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

மாராண்டஅள்ளி :

22—9—56 மாலை 6 மணிக்கு, அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சின்னாளப்பட்டி :

22—9—56ல் நகரில், கழகக் கொடிகள் அனைத்தும் பாதிக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டன. மாலை $4\frac{1}{2}$ மணிக்கு அமைதியாக ஊர்வலம் நடைபெற்று, இறுதியில் அனுதாபப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பழனி :

நகரில் பறந்துகொண்டிருந்த கழகக் கொடிகள் தாழப் பறக்க விடப்பட்டன. தோழர்கள் அனைவரும் கருப்புச் சின்னம் அணிந்து, தேரடியில் இருந்து பல கட்சிகளும் அடங்கிய ஊர்வலம் நடைபெற்ற பின், நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் பல கட்சித் தோழர்களும் சொற்பொழிவாற்றி அனுதாபம் தெரிவித்ததுடன், அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இடைப்பாடி :

22—9—56 காலை, தோழர்கள் அனைவரும் கருப்புச் சின்னம் அணிந்து துக்கம் கொண்டாடினர் வேலாயுதம் படிப்பகத்திலிருந்து மாலை 5 மணிக்கு மவுன ஊர்வலம் நடைபெற்று அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. கழகக் கொடிகள் அனைத்தும் தாழப் பறக்கவிடப் பட்டன.

மூலனூர் :

23—9—56 மாலை 3 மணியளவில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. கழகக் கொடி தாழப் பறக்கவிடப்பட்டது. அனுதாபம் தெரிவித்துத் தோழர்கள் பலர் பேசினர்.

சூரக்குடி :

23—9—56 இரவு 8 மணிக்கு கலைமணி தேநீர் சாலையில் நடைபெற்றக் கிளைக் கழகக் கூட்டத்தில், அனுதாபம் தெரிவித்துத் தோழர்கள் பலர் பேசி, தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், அவரது ஞாபகார்த்தமாக மரம் நடு விழா நடைபெற்றது.

காதக்கோட்டை :

24—9—56 மாலை 6 மணிக்கு, அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. 5 நிமிட நேரம் மௌனமாக நின்று அனுதாபம் செலுத்தப் பட்டுத் தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது.

திருத்தங்கல் :

22—9—56 அன்று கழகக் கொடிகள் அனைத்தும் தாழப் பறக்கவிடப்பட்டன. சேடான் கிணறு மைதானத்தில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துத் தோழாகள் பலர் பேசினர்.

புதுப்பட்டி :

23—9—56 அன்று கழகக் கொடிகள் தாழ்த்திப் பறக்கவிடப் பட்டன. மவுன ஊர்வலம் நடைபெற்று, கூட்டமும் நடைபெற்றது. அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

கும்பகோணம் :

23—9—56ல் நடைபெற இருந்த கொடியேற்று விழா, ஊர்வலம் ஒத்திவைக்கப்பட்டு மாலை குடந்தை புகைவண்டி நிலையத்திலிருந்து மாபெரும் மௌன ஊர்வலம் நடைபெற்று, அரண்மனைத் தோட்டத்தில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. ஒரு நிமிடம் மௌனம் மேற்கொண்டு அனுதாபம் காட்டப்பட்டது. கழகக் கொடிகள் தாழப் பறக்கவிடப் பட்டன.

புதுவை :

23—9—56 மாலை 7 மணிக்கு நடைபெற்றச் செயற்குழுக் கூட்டத்தில், ஒரு நிமிட நேரம் மௌனமாக இருந்து அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது. புதுவை வட்டத்திலுள்ள பல கிளைக் கழகங்கள் விடுதலை நாள் கூட்ட நிகழ்ச்சிகளை ஒத்திவைத்துள்ளன.

சங்கரநயினார்கோயில் :

நகரெங்கும் கருப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டன. கழகக் கொடிகள் பாதிக் கம்பத்தில் பறக்கவிடப் பட்டன. 22-9-56 இரவு 9 மணிக்கு செயலாளர் இல்லத்திலிருந்து தோழர் சாமியின் உருவப் படத்துடன் மௌன ஊர்வலம் நடைபெற்று, கார்நித் திடலில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பிலும் கூட்டத்தில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப் பட்டது.

போடிநாயக்கனூர் :

22—9—56 மாலை திருமலாபுரம் பெரியார் திடலிலிருந்து அனுதாப மௌன ஊர்வலம் புறப் பட்டு, தொண்டன் பழனியாண்டி திடலில் முடிவுற்றது. ஊர்வலத்தில் தோழர் சாமியின் புகைப்படம் எடுத்துச் செல்லப்பட்டது. பொதுக்கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தேவகோட்டை :

22—9—56ல் நடைபெற்றக் கிளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில், உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிட நேரம் மௌனமாக இருந்து அனுதாபம் தெரிவித்துக் கொண்டனர்; தீர்மானமும் நிறை வேற்றப்பட்டது.

தொடையூர் :

24—9—56 மாலை கிளைக் கழகச் சார்பில் அனுதாபப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கழகக் கொடிகள் தாழப் பறக்கவிடப்பட்டன.

கல்லுக்குழி :

22—9—56 மாலை 6 மணிக்கு நடைபெற்றக் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருவேகம்புத்தூர் :

24—9—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு மௌன ஊர்வலம் நடைபெற்று, காந்தி மைதானத்தை அடைந்ததும் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர் அ. பொன்னம்பலனார் மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

செங்கற்பட்டு :

23—9—56ல், தர்க்கா திடலில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிடம் மௌனமாக நின்று அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. தோழர்கள் என். வி. நடராசன், டி. கே. சீனிவாசன் பேசினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கனியாபட்டி :

கிளைக் கழகத்தில் பறந்து கொண்டிருந்த கழகக் கொடி தாழப் பறக்கவிடப்பட்டு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்கிறது.

அறந்தாங்கி :

22—9—56-ல், தோழர் சாமியின் உருவப் படத்துடன், தோழர்கள் அடங்கிய மௌன ஊர்வலம் நடைபெற்றது. வ. உ. சி திடலில் நடைபெற்றக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பசும்பொன் :

தோழர் இளையோன் தலைமையில் நடைபெற்ற வள்ளுவர் மன்றக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தளவாய்புரம் :

22—9—56 ல் கழகக் கொடிகள் அனைத்தும் தாழப் பறக்க விடப்பட்டு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

திருவனந்தபுரம் :

24—9—56-ல், திருவனந்தபுரம் தம்பானூர் தி. மு. கழக மாணவர் கிளையின சார்பில் நடைபெற்ற பிரிவினை விழாக் கூட்டத்தில், அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப் பட்டது.

மூக்கூடல் :

கழகக் கொடிகள் அனைத்தும் தாழப் பறக்கவிடப்பட்டன. மூக்கூடல் கிளைக் கழகச் செயலாளர் தோழர் மா. சு. முத்துக்குட்டி தூத்துக்குடி சென்று சாமியின் சவ ஊர்வலம், அடக்கம் ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்.

திருப்பூர் :

திரு. வி. க. நாடக மன்றச் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சின்னவாகைக்குளம் :

25—9—56-ல், மந்தைத் திடலில் நடைபெற்ற விடுதலை நாள் பொதுக்கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னிமலை :

22—9—56-ல், தோழர் அலாவுதீன் இல்லத்தில், திரு.வி.க. மன்ற அவசரக்கூட்டம் நடைபெற்றது அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பெங்களூர்—சீராமபுரம் :

23-9-56 மாலை $6\frac{1}{2}$-மணியளவில் நடைபெற்ற விடுதலை நாள் விழாக் கூட்டத்தில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அனைவரும் இரண்டு நிமிட நேரம் மௌனமாக எழுந்து நின்றனர்.

எமனேசுவரம் :

22—9—56 இரவு 9 மணிக்கு, அண்ணா படிப்பகத்தில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

கோவை :

22—9—56 மாலை 6 மணிக்கு அழகிரி நினைவுப் படிப்பகச் சார்பில் நடைபெற இருந்த கூட்டம் அனுதாபக் கூட்டமாக நடத்தப் பட்டது. தோழர்கள் அனைவரும் கருப்புச் சின்னங்கள் அணிந்திருந்தனர். கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருப்பரங்குன்றம் :

21—9—56 மாலை 5 மணிக்கு, திராவிட பகுத்தறிவு மன்றச் சார்பில் மௌன ஊர்வலம் நடைபெற்றது. அனுதாபக் கூட்டத்தின் போது தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

அருப்புக்கோட்டை :

22—9—56 இரவு 10 மணிக்கு ஊ. பு. அ. சவுந்திர பாண்டியனார் நினைவுப் படிப்பகத்தில் நடைபெற்றக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம நிறைவேற்றப் பட்டது. ஒரு நிமிட நேரம் மௌனம் கடைப்பிடிக்கப்பட்டது.

கோவை :

24—9—56ல் புலியகுளம் தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில், கோவை ஸ்டேன்ஸ் மில், காளீஸ்வரா, சோமசுந்தரா ஆலைத் தொழிலாளர்கள் சார்பில் அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

கீழப்பிடாகை :

22—9—56 இரவு 8 மணிக்கு, தென்னவர் படிப்பக அவசர செயற்குழுக் கூட்டத்தில், அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விருதுநகர் :

22—9—56ல் நடைபெற்ற எம். எஸ். பெரியசாமி படிப்பகச் செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

திருப்பத்தூர் (வ. ஆ.) :

23—9—56 காலை 10 மணிக்கு, அழகிரி முன்னணி நாடக மன்றச் செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கோவை :

23—9—56ல் மக்கள் முற்போக்கு வாசகசாலை உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பம்பாய்—தாராவி :

தோழர் சாமி அவர்களின் மறைவு குறித்து பம்பாய் வாழ் தோழர்கள் செல்லை எஸ். தங்கராசன், பாளையம்பட்டி கே. எம். ஆத்தியப்பன், பாளையம்பட்டி எஸ். கே. இராசமணி ஆகியோர் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்கின்றனர்.

நகர சுத்தித் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

சென்னை, செப். 26—

அடிப்படைச் சம்பளம், கிராக்கிப்படி, வீட்டு வாடகை அலவன்ஸ் முதலியவற்றை உயர்த்தும்படி கோரி சென்னை நகர சுத்தித் தொழிலாளர்கள் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். ஆனால் மொத்தமுள்ள 4,000 தொழிலாளர்களில் பாதிக்குமேல் வேலைக்கு வந்தனர்; எனவே, வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெறவில்லை என்று செய்திகள் கூறுகின்றன.

குப்பை வண்டிகளின் 'கடை ஆணி'கள் கழற்றப்பட்டிருந்தவே, புதிய 'கடை ஆணி'களைப்போட்டு மொத்த வண்டிகளில் 75 சதவிகிதம் வேலை செய்தனவாம்; எல்லா குப்பை லாரிகளும் ஓடினவாம். நகரசபை கட்டிடத்தைப் போலீஸ் பாதுகாத்து வந்தது.

கோவையில்:

கோவை, செப். 26—

கோவை நகரசபையைச் சேர்ந்த நகரசுத்தித் தொழிலாளர்கள் இன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாகச் செய்துள்ளனர்.

சேலத்தில் :

சேலம், செப். 26—

சேலம் நகரசுத்தித் தொழிலாளர்கள், மலேரியா தடுப்பு ஊழியர்கள் 700 பேர் இன்று அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

மூன்று இலட்சம் தென்னைகள் நாசம்

சென்னை, செப். 25—

அரசாங்கம் தென்னங்கன்றுகளை வளர்க்கவும், தென்னைகளின் தரங்களைப் பரிசீலனை செய்து உயர்த்தவும், உடனடியாக ஆராய்ச்சி நிலையமொன்று ஏற்படுத்தப் போவதாகவும், அநேகமாகப் பட்டுக்கோட்டையில் ஆராய்ச்சி நிலையம் திறக்கப்படலாம் என்றும், சென்னை மாநில தென்னங்கன்று அபிவிருத்தி அதிகாரி புயலினால் பாதிக்கப்பட்ட இடங்களைச் சுற்றிப் பார்வையிடுகையில் கூறியுள்ளார்.

புயலினால் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 3 இலட்சம் தென்னை மரங்கள் சேதமடைந்து விட்டன. அவைகளை ஈடு செய்வதற்காக விவசாய இலாகா முத்துப்பேட்டைக்கு 2 இலட்சம் தென்னங்கன்றுகள் அளித்திருக்கின்றனர் என்றும், 6 மாத காலத்திற்குள் அவைகள் நடப்பட்டு விடுமென்றும் கூறப்பட்டுள்ளது.

அருமையான காரணம்

தனக்குத் தேவையெனக் கூறி, போலந்தைச்சேர்ந்த ப பாவாக் தொழிற்சாலை ஒன்றுக்கு இரயில் பெட்டிக்காக இந்தியா 'ஆர்டர்' கொடுத்ததாம்.

அந்த 'ஆர்டரில்' கண்டுள்ளபடி இந்த செப்டம்பர் மாதம் 20-க் தேதிக்குள்ளாகவே அத்தொழிற்சாலை, 1,308 'வாகன்'கள் அனுப்பியிருக்கவேண்டும். இந்த எண்ணிக்கையான 1,308 வாகன்கள் என்பது, கொடுக்கப்பட்ட ஆர்டரில் கேட்கப்பட்டிருந்த மொத்த எண்ணிக்கையில் பாதியேயாகும்.

ஆனால், இதுவரையிலும் அந்நிறுவனம் அனுப்பியிருக்கும் 'வாகன்'கள் மொத்தம் 1,200 என்றுதான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலைமைக்கு என்ன காரணம் என்று கேட்கப்பட்டபோது, அந்நிறுவனம், தன் தொழிற்சாலையில் உற்பத்தி வேலையில் 'மந்தம்' ஏற்பட்டு தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சமாதானம் கூறியிருக்கிறதாம்!

இந்தியாவுக்கு அனுப்பித்தர வேண்டிய வாகன்களை அனுப்பும் பிரச்சினையில் அத்தொழிற்சாலை மிகக் கஷ்டப்பட்டு உழன்று வருவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

உடன் பணியாற்றிவரும் அன்மையிலுள்ள இரண்டொரு நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய இப்பெட்டிகளுக்குத் தேவையான உறுப்புக்கள் தக்க சமயத்தில் கொடுக்கப்படாமல் போனதே இதற்குக் காரணம் என்றும் வேறொரு சமாதானம் கூறப்பட்டிருக்கிறது.

கே. வி. கே. சாமி நினைவு நாள்:

30-9-56 அனுதாபக்கூட்டங்கள்

மணப்பாறை:
மாலை 6 மணிக்கு தோழர் மா. இளங்கிரன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் பொ. மதிவாணன், என். வடிவேலன், நா. சக்ரபாணி, பழவை தமிழழகன் பேசுவர்.

வேலப்பாடி;
காலை 8 மணிக்கு தோழர் வே. அ. இளஞ்செழியன் தலைமையில் கூட்டம் நடைபெறும்; தோழர்கள் வே. சு. பாண்டியன், அ. பாலகிருட்டிணன், வி. வி. எழிலிசன் பேசுவர்.

பெங்களூர் மாவட்டம்:
மாலை 6 மணிக்கு சீராமபுரம் வ. உ. சி. திடலில், தோழர் எஸ். வி. பதி தலைமையில் நடைபெறும்; தோழர்கள் எஸ். ஜே. உசேன், ஏ. டி. பிரான்சிஸ், எம். கிருட்டிணன், எம். நெடுஞ்சேரலாதன், வி. முத்து, பி. செல்வராசன், எம். சி. வேணு, ஜே கனகசுந்தரம் பேசுவர்.

ஆம்பூர்:
மாலை 6-30 மணிக்கு வாரச் சந்தையில் நடைபெறும்; தோழர்கள் ஏ. எல். சி. கிருட்டிணசாமி, வி. ஏ. பதூல், பாண்டியன், இளஞ்செழியன் பேசுவர்.

திருவண்ணாமலை:
மாலை 6 மணிக்கு, செட்டித் தெரு பிள்ளையார் கோயில் முன்பு தோழர் ச. கண்ணன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள்: சோ. பாலசுப்பிரமணியம், து. சுப்பிரமணியம், வேட்டவலம் கிருஷ்ணன், தி. மா. லோகநாதன், பெ. சு. ப. சாரங்கபாணி பேசுவர்.

இராசீபுரம்:
மாலை 4-30 மணிக்கு, முனிசிபல் சத்திரத்திலிருந்து அனுதாப ஊர்வலம் தோழர் கே. வி. கே. இராமசாமி தலைமையில் புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியாகச் சென்று புதுசந்தைப்பேட்டையில் முடிவுறும்.

சென்னையில்:

1-வது வட்டம்:
காலை 8 மணிக்கு டாக்டர் நாராயணசாமி தலைமையில், வண்ணை வள்ளுவர் இளைஞர் மன்றத்திலிருந்து மௌன ஊர்வலம் புறப்பட்டு, தமிழ் வளர்ச்சி மன்றத்தில் முடிவுறும்.

11-வது வட்டம்:
காலை 10 மணிக்கு 4/88-ஏ., பிராட்வே, கழக அறையில் தோழர் சா. வி. இராதாகிருட்டிணன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

14-வது வட்டம்:
காலை 8 மணிக்கு அண்ணாபிள்ளைத் தெருவில் (கொத்தவால் சாவடி எதிரில்) நடைபெறும்; தோழர்கள் கோ. செங்குட்டுவன், மு. புரட்சிமணி, இளஞ்சேரலாதன், அ. ருக்மாங்கதன் பேசுவர்.

18-வது வட்டம்:
காலை 9 மணிக்கு கழகப் பணிமனையில் தோழர் சா. கோ நாராயணசாமி தலைமையில் நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

31-வது வட்டம்:
காலை $10\frac{1}{2}$ மணிக்கு நாசப்ப முதலி தெரு எண் 12, இல்லத்தில் நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

49-வது வட்டம்:
காலை 10 மணிக்கு கிளைக் கழகப் பணிமனையில் தோழர் ஏ. இராபர்ட் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

வால்பாறை:
மாலை 6 மணிக்கு, காந்தித் திடலில், வால்பாறை வட்டத்திலுள்ள 30 கிளைக் கழகங்கள் சார்பில் அனுதாபப் பொதுக் கூட்டம் நடைபெறும்.

வேலூர் (வ. ஆ.):
காலை 9 மணிக்கு நகர மன்றத்தில் நடைபெறும் நகர செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படும்.

பண்ணுருட்டி:
மாலை 6 மணிக்கு, பழைய இராசா டாக்கீஸ் திடலில், தோழர் ஜே. தர்மாஞ்சலு தலைமையில் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், எம். பி. சுப்பிரமணியம், எம். எல். ஏ., வி. கிருஷ்ணமூர்த்தி பேசுவர்.

சேலம்-அம்மாப்பேட்டை:
மாலை 6 மணிக்கு, தோழர் சி. ஏ. சித்தையன் தலைமையில் நடைபெறும். தோழர்கள்: கி. மனோகரன், ப. உ. சண்முகம், இ. ஆர். கிருஷ்ணன், எ. சுப்பிரமணியம் ஆகியோர் பேசுவர்.

சலவன்பேட்டை:
மாலை 6 மணிக்கு, வேலூர் பாரக்ஸ் மைதானத்தில், தோழர் கே. கோவிந்தன் தலைமையில் தோழர்கள் சி. பி. சிற்றரசு, அ. கருத்தோவியன், இரா. புகழேந்தி பேசுவர்.

புதுவை:
மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, ஒதியஞ்சாலைத் திடலில் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் தோழர்கள் டி. கே. சீனிவாசன், பேசுவார்.

கிரமங்கலம்:
30—9—56ல் மேல்பாதியில் தோழர் எம். எஸ். பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். தோழர் என். எஸ். இளங்கோ பேசுவார்.

பந்தநல்லூர்:
மாலை 5 மணிக்கு, பட்டி மைதானத்தில், தோழர் தி. துரைராசன் தலைமையில், தோழர்கள் பொ. தருமன், ம. கோ. மணி, என். அசோகன் பேசுவர். மாலை 4 மணிக்கு, பட்டி மைதானத்திலிருந்து, பி. ஏ. லிங்கன் தலைமையில் ஊர்வலம் நடைபெறும்.

மதுரை:
மாலை 6 மணிக்கு, கீழ மார்க்கெட் அருகில், அண்ணா திடலில் நடைபெறும். தோழர்கள் எஸ். முத்து, வி. சௌந்தரராசன், கே. எஸ். சந்தானம், என். எஸ். இராசா ஆகியோர் பேசுவர்.

திருப்பூர்:
மாலை 6 மணிக்கு, நொய்யல் நதி மைதானத்தில், தோழர் என். பால்ராசு தலைமையில், தோழர் க. அன்பழகன் பேசுவார்.

திருப்பத்தூர் (வ. ஆ.):
30—9—56 மாலை தமிழிசைக் கழக மைதானத்தில் நடைபெறும். தோழர்கள் க. நெடுஞ்சோழன், கே. தாசரதி, ஆர். எஸ். மணி, எம். தர்மலிங்கம், டி. ஏ. மணி, எம். அருணகிரி பேசுவர்.

காஞ்சீபுரம்:
30—9—56 மாலை செங்கைசொண்டான் மண்டபத்தருகில் தோழர் செ. சடையாண்டி தலைமையில் தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, வி. சம்பந்தம், இரா. வெங்கடேசன், இ. எத்துராசன், டி. சீனுவாசன், எஸ். முருகேசன் பேசுவர்.

ஆலந்தூர்:
காலை $9\frac{1}{2}$ மணிக்கு கழக மாடியில் அனுதாபக் கூட்டம் நடைபெறும்.

விழுப்புரம்:
இரவு 7 மணிக்கு மர்தகரை மைதானத்தில் நடைபெறும். தோழர் காஞ்சி - கல்யாணசுந்தரம் பேசுவார்.

புஞ்சைத்தலையூர்:
மாலை 6 மணிக்கு கே. வி. கே. சாமி திடலில், தோழர் ப. பெரியசாமி தலைமையில் தோழர்கள் கோதை - பொன்னப்பா, நைனு முகம்மது பேசுவர்.

திருக்கோட்டியூர்:
மாலை 6 மணிக்கு நடைபெறும் தோழர் எஸ். எஸ். தென்னரசு பேசுவார்.

சின்னவாகைக்குளம்:
மாலை 6 மணிக்கு குமரன்கோயில் திடலில் தோழா ஆர். கே. வேலன் தலைமையில் தோழர்கள் எம். ஏ. இராசாக், க. ம வ. நடராசன் பேசுவர். மாலை 4 மணிக்குக் கட்டிடத்திலிருந்து மௌன ஊர்வலம் புறப்படும்.

திண்டுக்கல்:
மாலை 6 மணிக்கு வ. உ. சி திடலில் தோழர் வி. எல். வி. இராசன் தலைமையில் தோழர்கள் மு. வசனப்பித்தன், ஆர். வேலாயுதன், என். முத்து, ஏ. சுப்பையா பேசுவர்; மாலை 5 மணிக்கு மௌன ஊர்வலம் நடைபெறும்.

பரமக்குடி:
மாலை 6 மணிக்கு குமரன் படித்துறையில் ஜி. நடராசன் தலைமையில் தோழர் எஸ். நெடுமாறன் பேசுவார்.

பெங்களூர்—இலக்குமணபுரி:
காலை 10 மணிக்கு கழக அறையில் தோழர் ஆர். முனுசாமி தலைமையில் நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

திருப்பாலக்குடி:
இரவு 8 மணிக்கு மன்னார்குடி வட்டக் குழுக் கூட்டம் தோழர் ப. நாராயணசாமி முன்னிலையில் நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

பணமல்ல குறிக்கோள்.....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

5,000 குடிமக்களுக்குத் தலைவரானார்.

தான் படிப்பதற்கு ஏராளமான பணத்தைச் செலவு செய்த தன் குடும்பத்திற்கு இது சம்பந்தமாக அறிவிக்கையில், 'பணம் அல்ல என் குறிக்கோள்; கிராம முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதே யாகும்,' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் தேயிலை உபயோகம் 1954-55-ம் ஆண்டில் சுமார் 18 3 கோடி பவுண்டாக இருந்தது —1955-56-ம் ஆண்டில் 20·6 கோடி பவுண்டுக்கு உயர்ந்துவிட்டது.

****

கே. வி. கே. சாமி பிரிவு

தூத்துக்குடியில்

அனுதாபக் கூட்டம்

★

30-9-56 ஞாயிறு மாலை 6 மணிக்கு

வ. உ. சி. திடலில்

★

அண்ணா

துணைப்பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்

மதுரை முத்து, ஆர். எஸ். பாண்டியன்

மற்றும் பலர் பேசுவர்

****

****

கே. வி. கே. சாமி படுகொலை

சென்னையில் 30-9-56 ஞாயிறன்று

அனுதாபக் கூட்டம்—ஊர்வலம்

★

மௌன ஊர்வலம்:

மாலை 3-மணிக்கு

நேப்பியர் பார்க்கிலிருந்து

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமையில் புறப்பட்டு, சிந்தாதிரிப்பேட்டை—அருணாசல நாய்க்கன் தெரு, அய்யாமுதலி தெரு ஆகியவைகளின் வழியாக பூந்தமல்லி ஐரோடு, சென்ட்ரல் ஸ்டேஷன், ராட்டன் பசார், சுபாஷ்சந்திர போஸ்ரோடு, பிராட்வே, மணிகார் சவுல்ட்ரி ரோடு, ஜாண்ட்ர பிள்ளையார் கோயில் தெரு, இராமானுசய்யர் தெரு, திருவொற்றியூர் ஐரோடு, சிமெட்ரி ரோடு வழியாகச் செல்லும்.

மு. கருணாநிதி, ஏ.வி.பி. ஆசைத்தம்பி
சத்தியவாணிமுத்து, அலமேலு அப்பாதுரை,
என். சீவரத்தினம், காஞ்சி-மணிமொழியார்
டி.வி. நாராயணசாமி, டி.கே. பொன்னுவேலு

அணிவகுத்து வருவர்

★

மாலை 6-மணிக்கு

வண்ணை—கல்லறைத் திடலில்

அனுதாபக் கூட்டம்

பொதுச்செயலாளர் அவர்களும், மற்றும் பல தோழர்களும் பேசுவர்

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****

நெல்லை மாவட்டத் தோழர்களுக்கு:

"நெல்லை மாவட்டத்திலுள்ள கிளைக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழக அலுவல்கள் சம்பந்தமாக என்னோடுதொடர்பு கொள்ள வேண்டுகிறேன்."

W. D. துரைசாமி, துணைச் செயலாளர், நெல்லை மாவட்ட தி. மு. கழகம், கோவில்பட்டி.

கோவை ஸ்டேன்ஸ்மில்

தி. மு. க. தொழிலாளர்கட்கு:

30-9-56 காலை 10 மணியளவில் அழகிரி நினைவுப் படிப்பகத்தில் மேற்படி ஆலைத் தி. மு. கழகத் தோழர்கள் சார்பில் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்பதற்கான நிதிக் குழு அமைப்புக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் அனைவரும் கலந்துகொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சென்னையில் மௌன ஊர்வலம்:

கழகத் தோழர்களுக்கு

வேண்டுகோள்

★

30—9—56 ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு நேப்பியர் பார்க்கிலிருந்து புறப்படும் மௌன ஊர்வலத்தில் கலந்து கொள்பவர்கள், தங்கள் சட்டையில், சிறிய அளவில் கருப்புச் சின்னம் அணிந்து வருவதற்கான ஏற்பாட்டினை ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள் அன்புகூர்ந்து செய்ய வேண்டுவதுடன், ஊர்வலம் அமைதியாக நடைபெறவும் ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

****

பவானி தையல் தொழிலாளர் சங்கம்

30-9-56 மாலை 3-30 மணிக்கு, பவானி திருமேனி நிலையத்தில் பவானி தையல் தொழிலாளர் சங்கத்தின் 10-வது ஆண்டுவிழா நடைபெறும்.

பவானி தொகுதிக் குழு

30-9-56 மாலை 5 மணிக்கு குருவரெட்டியூர் தி. மு. கழகப் பணிமனையில் பவானி தொகுதி தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். தேர்தல் குழு நிலை ஆய்வுக் குழுவைக் கண்டு நிலைமை விளக்குவது, மற்றும் பல முக்கியப் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியனை ஆம் ஏ